09.01.2026

O.S.No. 281/2022

PW2– தங்கம் – த/பெ. சுப்பையா பாண்டியன்

Solemnly affirmed in accordance with the Provisions of Act X of 1873 on the day of 09.01.2026

<u>குறுக்கு விசாரணை :</u> ( 1ம் பிரதிவாதி தரப்பில்)

1. வாதி அழைத்தன்பேரில் சாட்சியம் அளிக்க வந்துள்ளேன் என்றால் சரிதான். முதல்விசாரணை வாக்குமூலத்தில் உள்ள சங்கதிகள் தெரியுமா என்றால் எனக்கு தெரியும். அதில் என்ன கூறியுள்ளேன் என்றால், வாதி எனக்கு 40 ஆண்டுகளாக பழக்கமானவர், பிராது தபசில்சொத்து வாதியின் அனுபவத்தில் 40 ஆண்டுகளாக இருந்துவருவது எனக்கு தெரியும், 12.01.2022 பிரதிவாதி தாவா சொத்து தங்களுக்குள்ளது என பிரச்சனை செய்தார், நான் நடுவராக மேற்படி பிரச்சனையில் இருந்ததால் எனக்கு நேரடியாக தெரியும்.

2. முதல்விசாரணை வாக்குமூலத்தை நானே அச்சம்புதூரில் உள்ள தங்கம் தட்டச்சு அலுவலகத்தில் தட்டச்சு செய்து கொண்டுவந்தேன். மேற்படி அலுவலகம் பஞ்சாயத்து அலுலவகத்திற்கு மேல்பக்கமாக உள்ளது. எனது முதல்விசாரணை வாக்குமூலத்தில் எந்த வழக்கறிஞர் மேலொப்பம் செய்தார் என்றால் சுடலைக்குமார் வழக்கறிஞர் தான் மேலோப்பம் செய்தார். சாட்சியிடம் தனது முதல்விசாரணை வாக்குமூலத்தை காண்பித்து 3 வது பக்கத்தில் உள்ள கையெழுத்து யாருடையது என்று கேட்டதற்கு சுடலைக்குமார் வழக்கறிஞரினுடையது என கூறினார். அதில் வழக்கறிஞரின் பதிவு எண்.MS 3469/2023 என குறிப்பிடப்பட்டுள்ளது. நான் எனது கையொப்பத்தை வழக்கறிஞர்

அலுவலகத்தில் செய்தேன், அங்குதான் நான் கூறிய வழக்கறிஞரும் கையொப்பம் செய்தார். வாதியின் வழக்கறிஞரே மேற்படி முதல்விசாரணை வாக்குமூலத்தில் சான்றொப்பம் செய்ததால் மேற்படி எனது வாக்குமூலம் சடட்டப்படி ஏற்புடையதல்ல என்றால் சரியல்ல.

3. என் மீது இந்திய தண்டனை சட்டம் பிரிவு 307 ன் கீழ் ஒருகுற்ற வழக்கு இருந்தது. எனக்கு வீடியோ தங்கம் என்று ஒரு பெயர் இருந்தது என்றால் சரிதான். நான் வீடியோ வியாபாரம் செய்துவந்ததால் அந்த பெயர் வந்தது என்றால் சரிதான். வீடியோ தொடர்பாக என் மீது வழக்கு நிலுவையில் உள்ளது என்றால் சரியல்ல. எனக்கு பிற நபர்களுக்காக சாட்சியம் சொல்லும் பழக்கம் உண்டு என்றால் சரியல்ல. என் மீது பணப்பற்று தொடர்பாக வழக்கு நிலுவையில் உள்ளது என்றால் சரிதான். சொத்து தொடர்பாக வழக்கு இருந்தது, தற்போது இல்லை.

4. எனக்கு தாவா சொத்தின் சர்வே எண் தெரியாது. வழக்கு சொத்திற்கு அடுத்த கீழ்பக்கம் பெரியசாமித்தேவர்இடமும், மேற்கே மையது பாவா மற்றும் சிலர் இடமும், தெற்கே ஆறும், வடக்கே ஓடையும் உள்ளது. தாவா சொத்தின் பரப்பளவு 25 முதல் 27 ஏக்கர் இருக்கும்.

5. தபசில்சொத்து புஞ்சை நிலமாகும். 40 ஆண்டுகளுக்கு முன்பாக தபசில் சொத்தில் சுமார் 200 தென்னைமரங்கள் 50 வயதுடையதாக இருந்தது, சுமார் 3 ஆண்டு வயதுள்ள மாங்கன்றுகள் இருந்தது. தபசில்சொத்தை சுற்றிலும் மண்பொழி தான் இருந்தது. முதல்விசாரணை வாக்குமூலத்தில் சொல்லியுள்ள JCB இயந்திரங்களின் பதிவு எண்கள் தெரியாது. அதை இயக்கியவரின் பெயரும் தெரியாது.

6. 1ம் பிரதிவாதியின் மீது முன்பு குற்றவழக்கு பதிவு செய்யப்படவில்லை என்றால் சரிதான், தற்போது பதிவு செய்யப்ட்டுள்ளது. மாண்புமிகு உயர்நீதிமன்றத்தின் உத்தரவின் அடிப்படையில் 1ம் பிரதிவாதி மீது வழக்கு பதிவு செய்யப்பட்டது. வழக்கு தற்போது முடித்துவைக்கப்பட்டுள்ளது என்றால் நிலுவையில் உள்ளதாக சொன்னார்கள்.

7. எனது முதல்விசாரணை வாக்குமூலத்தில் சொல்லியுள்ள சங்கதிகள் அனைத்தும் வழக்கில் எந்த இடத்திலும் கூறப்படவில்லை, மேலும் வாதியின் சாட்சியத்திற்கு பின்பு பலப்படுத்தவேண்டும் என்ற நோக்கோடு உற்பத்திசெய்யப்பட்டது என்றால் சரியல்ல. வாதியின் பெயரில் பட்டா இந்நாள்வரை இல்லை என்றால் சரிதான், ஆனால் முகம்மது அலி என்ற பெயரில் பட்டா உள்ளது. வழக்கு சொத்தை பொறுத்து ஆவணங்கள் எதுவும் வாதியின் பெயரில் இல்லை என்றால் சரியல்ல, உள்ளது அதுகிரைய ஆவணமாகும், வாதி இளவராகஇருந்தபோது அவரது தந்தை வாதியின் பெயரில் வாங்கிய கிரைய ஆவணமாகும். 1ம் பிரதிவாதி எனது உறவினர் என்றால் சரிதான். பிரதிவாதி விளம்புகை பரிகாரம் கேட்டு மாண்பமை மாவட்ட நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்துநிலுவையில் உள்ளது என்றால் சரிதான். நான் வாதிக்காக வாதி அழைத்தன்பேரில் ஆதாயம் பெறறுக்கொண்டு சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எனது முதல்விசாரணை வாக்குமூலத்தில் உள்ள சங்கதிகள் அனைத்தும் உண்மைக்கு புறம்பானது என்றால் சரியல்ல.

ஒம்/–K.N.குரு
கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி
தென்காசி